வேலணை ஒன்றியம் – பிரித்தானியா

# VELANAI ONRIYUM - UK




## 2ம் ஆண்டு விழா மலர்

## 2nd Year Anniversary

## VO - UK

**Saturday, 25th April 2015**

South Ruislip Community Association
Deane Park, Long Drive
South Ruislip
HA4 0HS

"எம் ஊரின் அபிவிருத்தியினூடே எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்"


ANGLO ASIAN
PARCEL SERVICES
WORLDWIDE
Worldwide
Document Service
only £27.99 *
3 - 4 Working Days for delivery
லண்டனில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை,
மட்டக்களப்பு, கொழும்பு மேலும் பல இடங்களுக்கு மிக குறைந்த
விலையில் விரைவாக பொதிகளை அனுப்ப முடியும்
Special Offer
£2.99
per kg to
Sri Lanka
Anywere in India
only £2.99 * per KG
DOOR DOOR
SHIPPING OVERSEAS
Now You can send any where
துரித கதியில் உலகின் எப்பாகத்துக்கும் அனுப்ப மிகவும் நம்பகமான 15 வருட சேவையில்
Wembley Branch - 513, High Road, Wemley, London HA0 2DJ
020 8900 2451
EastHam Branch - 254, High Street North, East Ham, London E12 6SW
020 8586 5861


SAGHANA
Jewellers
Anniversary
Like Us On
facebook
SAGHANA
JEWELLERS
தங்கம் பேசுகிறது...
பேசாமல் பேசு வைக்கும்
ஷஹானாவின்
தங்க நகைகள்...
Wembley Branch - 11, Ealing Road, Wembley, London HA0 4AA .
020 8902 2030
East Ham Branch - 254, High Street North, East Ham, London E12 6SW.
020 8586 5861

வேலணை ஒன்றியம் – பிரித்தானியா

# VELANAI ONRIYUM - UK

2ம் ஆண்டு விழா மலர்

## 2nd Year Anniversary

## VO - UK

**Saturday, 25th April 2015**

South Ruislip Community Association
Deane Park, Long Drive
South Ruislip
HA4 0HS

"எம் ஊரின் அபிவிருத்தியினூடே எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்"

# செந்தமிழ்த்தாய் வாழ்த்து
## முன்னிலை

1. செந்தமிழ்ச் செல்வியாந் தெய்வமடி யிவள்
தேவர்கள் போற்றிடும் தெய்வமடி
கொந்தலர் சோலையில் ஏழிசை கூவிடுங்
கோமளப் பாவையிக் கொம்பரடி.

2. தென்றல் தவழ்ந்திடும் தென்பொதி கைமலை
தேவியிவள் வந்து தோன்றுமிடம்
கொன்றை யணிந்தவன் கோதில்சொற் பாவலர்
கூடி வளர்த்திடுங் கோதையடி.

3. சிந்தா மணிதிருக் கோவை சிலம்புடன்
செம்மை திகழ்மணி மேகலையே
நந்தா வளையுயர் குண்டல மாவிவை
நங்கை யணிந்திடும் நல்லணிகள்.

4. தெள்ளுந் திருக்குறள் முடிபுனைந்து நல்ல
சேக்கிழா ரீந்தசெங் கோல்பிடித்தே
அள்ளும் அகம்புற ஆக்கப் பெருக்குடன்
அன்னை யிவளர சாண்டிருந்தாள்.

5. ஓங்கு மிமயத்தில் விற்பொறித்தா ளிந்த
உலகம் முழுதும்பே ரொளிவிரித்தாள்
தாங்கும் அறம்பல போற்றிவைத் தாளெங்கள்
தாயிவள் மாண்பினைச் சாற்றுவமே.

6. ஆங்கில வாணரின் ஆய்வுக் கலையெலாம்
அன்னை யுளங்கொள ஆக்கிடுவோம்
ஓங்குஞ் சுதந்திர உண்மை யுணர்வினால்
உலகினை யாளவுங் கண்டிடுவோம்.

7. வாழிய செந்தமிழ் வாழியவே கலை
வண்மை கனிந்தென்றும் வாழியவே
ஊழி பலபல சென்றும் உலையாத
உண்மை ஒளியுடன் வாழியவே.

வித்துவான் க. வேந்தனார்

# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
# செயற்குழு உறுப்பினர்கள் 2014-15




நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)

திருமதி கலைவாணி அருளன்
திருமதி அம்பிகை சிவனேசநாதன்
திருமதி பத்மாவதி (லதா) அருள்ராஜ் (உப பொருளாளர்)
திருமதி சிந்து கயன்ராஜ் (உப செயலாளர்)
திருமதி மைதிலி ஜெகதீஸ்வரன்
திரு. அமிர்தலிங்கம் ஜெயகுகன்
திரு. சொர்ணலிங்கம் முகுந்தன்
திரு. வேன்னார் இளஞ்சேய் (தலைவர்)
திரு. அப்புத்துரை நோதனராஜா
திரு. வேலுப்பிள்ளை தவனேசன்
திரு. பொன்னம்பலம் சிறீதரன் (பொருளாளர்)
திரு. துரைசாமி சிவகுமாரன்
திரு. சுந்தரம்பிள்ளை சிவச்சந்திரன் (உப தலைவர்)

இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)

திரு. செல்வத்துரை சதீசன்
திரு. தியாகராசா கலைவேந்தன் (செயலாளர்)
திரு. இராமச்சந்திரன் குகப்பிரியன்

படத்தில் இடம்பெறாதோர்

திரு. ஞானசம்பந்தன் ஞானாந்தன் (மோகன்)

# வேலணைக் கிளை - இலங்கை

## செயற்குழு உறுப்பினர்களுடன் சிறப்புப் பிரதிநிதிகளும் 2014-15




இடமிருந்து வலமாக

| | |
|---|---|
| திரு வேல்முருகன் | (உறுப்பினர்) |
| திரு இராஜரட்ணம் சிவநாதன் | (பொருளாளர்) |
| திரு ரதீஸ்வரன் | (உப தலைவர்) |
| திருமதி ஞான சவுந்தரி சிவநாதன் | (சிறப்புப் பிரதிநிதி) |
| திருமதி கனகரட்னம் ரஞ்சிதமலர் | (சிறப்புப் பிரதிநிதி) |
| திருமதி பிறேமவதி | (உறுப்பினர்) |
| செல்வி அனுசியா | (உறுப்பினர்) |
| திரு நடராசா ஜெகநாதன் | (தலைவர்) |
| திரு அருளையா | (உறுப்பினர்) |
| திரு மார்க்கண்டுதாசன் | (உறுப்பினர்) |
| சு. அகிலன் | (உறுப்பினர்) |

குறிப்பு:
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா - வேலணைக் கிளையின் முழுமையான செயற்குழு விபரம் பக்கம் 35ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ஒன்றியத்தின் தலைவரின் செய்தி



வேலணை ஒன்றியம் - பிரித்தானியா தன் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் விழா சிறப்புடனும் சீருடனும் நடந்திட என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் இவ்விழா மலரில் ஒன்றியத்தின் தலைவர் என்ற முறையிலே சில விடயங்களையும் கருத்துக்களையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

வேலணை ஒன்றியம் பிரித்தானியா - வேலணையை விட்டுப் புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் வேலணை மக்களையும் அவர்கள் உறவுகளையும் ஓர் ஒன்றியத்தின்மூலம் இங்கு ஒன்றிணைப்பதையும், இவ்வொன்றியம் மூலம் - வேலணையில் வறிய நிலையில் வாழுகின்ற மக்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகச் செயற்படுவதையும் நோக்கமாகக் கொண்டு இருவருடங்களுக்கு முன்பு இங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நோக்கத்தைச் செயற்படுத்துவதற்காக, நாம் எம்மால் முயன்றவரை எமது நேரத்தையும், காலத்தையும் செலவிட்டு இதய சுத்தியுடன் இயங்கி வருகின்றோம். இங்குள்ள வேலணையூர் மக்கள் - வேலணையில் வாழ்கின்ற தம் உறவுகளுக்கு உதவிட எம்முடன் மிகவும் உற்சாகத்துடனும் - ஊக்கத்துடனும் சேர்ந்து செயற்பட்டு வருகின்றார்கள். நாம் வேலணைக்கு, இங்கிருந்து பாவித்த நல்ல நிலையிலுள்ள உடுதுணிகளை அனுப்பியபோது மிகவும் உற்சாகத்துடன் ஒத்துழைப்புத் தந்தார்கள்.

பின்பு நாம் தற்போது வேலணையில் செயற்படுத்திவரும் 'வேலணை மக்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ், 108 குடும்பங்களுக்கு தலா Rs.25,025 பெறுமதியான உதவியை வழங்கத் தீர்மானித்தபோது, எமக்கு அன்புடன் தம்மால் இயன்ற பணத்தை அன்பளிப்புச் செய்து எம்மை, இத்திட்டத்தை வெற்றிகரமாகநிறைவேற்ற உதவியுள்ளார்கள்.

இதில் குறிப்பாக சில வேலணையூர் வணிகப்பெருமக்கள், பெருமனதுடன் எமக்கு நிதி தந்து உதவியுள்ளமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இத் திட்டத்திற்கு உதவிய அனைத்து அன்பர்களின் விபரமும் நாம் வேலணையில் தெரிவுசெய்த 108 குடும்பங்களின் விபரமும் இம்மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நாம் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு நம் வேலணைக் கிளையினரும் தம் உதவியை எமக்குச் சிறப்பாக வழங்கி வருகின்றார்கள். இவ்வகையில் வேலணைக்கிளையின் பொருளாளர் திரு. சிவநாதனின் பங்களிப்பும் - உழைப்பும் குறிப்பிடத்தக்கதாகும். 'வேலணை மக்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம்' வேலணையில் வாழும் 108 குடும்பங்களுக்கு உதவி வழங்கத் தீர்மானித்து இதுவரை இரண்டு கட்டமாக 60 குடும்பங்களுக்கு உதவி வழங்கியுள்ளது. மிகுதியாகவுள்ள 48 குடும்பங்களுக்குமான உதவி 23-05-2015 அன்று வழங்கப்படத் தீர்மானித்துள்ளது. இத்திட்டத்திற்கான பண வரவு – செலவு கணக்குகள் வேலணைக் கிளையால் எமக்குச் சமர்ப்பிக்கப்பட்டு இவ்விழாமலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நாம் எம் மூன்றாவது ஆண்டில், வேலணை மக்களுக்கான தொழில் சார்ந்த பயனுள்ள உதவியை செய்யவிரும்புகின்றோம். இதற்கான திட்டம் வரும் 3 மாதங்களில் செயற்குழுவில் தீர்மானிக்கப்படும். இது பற்றி எம் அங்கத்தவர்கள் ஏதும் கருத்துக்கள் வைத்திருப்பின் அவர்கள் எமக்கு அதைத் தெரியப்படுத்தினால் எம் செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றிக் கலந்து ஆலோசிக்கமுடியும்.

இன்று புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற நம் ஈழத்தமிழர்கள், பல்வேறு அமைப்புகளை உருவாக்கி, அதன்மூலம் தம் கிராமத்திற்கும், நாட்டிற்கும் பயன்தரக்கூடிய பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தீவுப் பிரதேசத்திலும், அவ்வவ்தீவுகளை முன்னிலைப்படுத்தி கிராம ஒன்றியங்களும், நலன்புரிச்சங்கங்களும் இங்கு இயங்கி வருகின்றன. அவ்வகையில் எமக்குத் தெரியவந்த நான்கு தீவுப்பகுதி சங்கங்களைப் பிரதிநிதிப்படுத்தி, அவ்வவ் சங்கங்களின் செயற்குழு சார்பாக சிலரை எம் இவ்விழாவிற்கு வருகைதரும்படி கேட்டிருந்தோம். நீண்டகால நோக்கில் தீவுப் பகுதிகளின் நலனிற்காக இயங்கிவரும் இச்சங்கங்கள் தம்முள் தொடர்புகளையும், உறவுகளையும் பலப்படுத்திக் கொள்ளுதல் நல்லது என்பது என் எண்ணம்.

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா அதன் வேலணைக்கிளையூடாக நடாத்திவரும் செயற்திட்டங்கள் பற்றி இங்கு வாழும் மக்கள் மட்டுமல்ல பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளில் வாழும் வேலணை ஊர் மக்களும் அறிய ஆவல்பட்டு எம்முடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள். இவ்விழா மலர்கள் அவ்வாறு ஆர்வமுள்ள நம் மக்களுக்கும் அனுப்பிவைக்கப்படும். இதன்மூலம் அவர்கள் எம் செயற்பாடுகளை ஓரளவு அறிந்து கொள்ளமுடியும்.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற நம் தமிழ்ச்சமுதாயம் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து தம் வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதை நான் நன்கறிவேன். இவ்வாறான இறுக்கமான சூழ்நிலைகளிலும் - தம் கிராமம் - ஊர்க்கோயில் - படித்த பாடசாலை எனத் தம் புலத்து நினைவுகளை – உறவுகளை மறக்காமல் பல்வேறு விதமான சங்கங்களைத் தாபித்து – புலத்து மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதுடன் - தம் உறவுகளையும் தாம் நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடல்கள் - நிகழ்வுகள் மூலம் ஒருங்கிணைத்து இச்சங்கங்கள் ஆற்றிவரும் பணிகள் பாராட்டுக்குரியவையாகும். இவ்வகையில் வேலணை ஒன்றியம் பிரித்தானியாவும் தன் பங்காகக் கடந்த இரண்டு வருடங்களாக வேலணையில் வறிய நிலையில் வாழும் மக்களுக்கு உதவிவருவதுடன் - இங்கும் பல நிகழ்வுகளை நிகழ்த்தி நம்மவர்களை ஒன்றிணைத்து வருகின்றது.

இப்பணி இலகுவானதல்ல. பலர் தம் நேரத்தையும் - காலத்தையும், பணத்தையும் செலவழித்தே இச்சங்கங்களின் வெற்றிக்காக திட்டங்களுக்காக, செயற்பாடுகளுக்காக உழைத்து வருகின்றார்கள். இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி ஒற்றுமையாக இணைந்து சிறப்புடன் செயலாற்றிட அனைத்து மக்களும் முன்வரவேண்டும்.

அவரவர் தம்மால் இயன்ற பணிகளை முழுமனதுடன் ஒன்றியத்திற்கு வழங்கி – ஒன்றியத்திற்குக் கூடுதலான அங்கத்தவர்களைச் சேர்த்து அங்கத்துவப் பணங்களைத் தவறாமல் செலுத்தி – ஒன்றியத்தின் நிகழ்வுகளுக்கு தவறாது வருகை தந்து - இதய சுத்தியுடன் இயங்கி - இங்கும் - புலத்திலும் ஒன்றியம் சிறப்புடன் செயலாற்றிட உதவிட முன்வருமாறு அன்போடு அனைத்து வேலணையூர் உறவுகளையும் வேண்டுகின்றேன்.

**'எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்'**

நன்றி

வேந்தனார் இளஞ்சேய்
தலைவர்: வேலணை ஒன்றியம் - பிரித்தானியா.



# செயலாளரின் செய்தி

வேலணை ஒன்றியம் பிரித்தானியா இன்று தனது இரண்டாவது அகவை நிறைவு விழாவைச் சிறப்புடன் கொண்டாடுகின்றது. இவ்விழா சிறப்புடன் நடந்திட என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், எமது ஒன்றியத்தின் செயலாளர் என்ற முறையிலே உங்களுடன் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விளைகின்றேன்.

எமது ஒன்றியம் வேலணையில் ஒரு கிளைச் சங்கத்தைத் தாபித்து அதன்மூலம் எமது செயற்பாடுகளை ஆற்றிவருவதை நீங்கள் அறிவீர்கள். எமது முதலாம் ஆண்டில் நாம் 10 வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கு தைப்பொங்கல் உதவிப்பணமாக 12-01-2014 அன்று மொத்தம் Rs.90,000வை பிரித்து வழங்கியிருந்தோம். பின்பு சித்திரை 5ஆம், 7ஆம் திகதிகளில் இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்ட மிகநல்ல நிலையிலுள்ள பாவித்த உடுதுணி-களை 200க்கும் மேற்பட்ட வறிய நிலையில் வாழும் மக்களுக்கு வழங்கியிருந்தோம்.

எம் இரண்டாம் ஆண்டில், நாம் வேலணையில் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் 108 குடும்பங்களுக்கு 'வேலணை மக்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புத்திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் உதவி வழங்கத் தீர்மானித்தோம். இதன் அடிப்படையில் இங்கு நாம் நம் வேலணை வணிகப் பெருமக்களிடமும் - வேலணை உறவுகளிடமும் - எம் ஒன்றியத்தின் அங்கத்தவர்களிடமும் - மற்றும் எம் ஆதரவாளர்களிடமும் உதவி வேண்டினோம். 56 நல்ல உள்ளங்களின் அன்பளிப்புடனும் நாம் நடாத்திய முதலாம் வருடாந்தக் கலைவிழா (26-04-2014) கலைமகள் விழா (04-10-2014) ஆகிய நிகழ்வுகளில் சிற்றுண்டி விற்பனை மூலம் கிடைத்த பணமும் ஆக நாம் மொத்தம் +14,580.11 சேர்க்கக் கூடியதாக இருந்தது. இதில் +14,455.11 எமக்கு வழங்கப்பட்டு எம் வங்கியிலும் இடப்பட்டது. நாம் முதற்கட்ட உதவியாக 10 குடும்பங்களுக்கு 24-1-2015 உதவி வழங்கினோம். இரண்டாம் கட்ட உதவியாக 50 குடும்பங்களுக்கு 4-4-2015 அன்றும் தொடர்ந்து 8-4-2015 உம் 11-4-2015 அன்றும் உதவிகள் வழங்கப்பட்டன. மிகுதியாக உள்ள 48 குடும்பங்களுக்குமான உதவி வரும் 23-05-2015 வழங்கப்படவுள்ளது. இவை பற்றிய முழு விபரங்களும் இம்மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கும் - எம் மக்களை ஒன்றிணைப்பதற்கும், இங்கு நான்கு நிகழ்வுகளைக் கடந்த இரண்டு வருடங்களில் நடாத்தி இருந்தோம். இன்று நடக்கின்ற நிகழ்வு 5 ஆவது நிகழ்வாகும். இந்நிகழ்வுகளில் எம் செயற்பாடுகளை அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்தியும் எம் இளைய தலைமுறையினரின் கலைநிகழ்ச்சிகளை வழங்கியும் வந்துள்ளோம். இதன் மூலம் எமது அடுத்த தலைமுறையினையும் எம் தமிழ்க்கலாசாரத்துடனும் - பண்பாட்டுடனும் வளர்ப்பதுடன் - எம் ஊர் பற்றிய உணர்வினையும் அவர்களுக்கு ஊட்டி வருகின்றோம். இவ்வாறான நிகழ்வுகளுக்கு நம்மில் பலர் தம் பொன்னான நேரத்தை செலவிட்டு, இவ் ஒன்றியத்தின் வளர்ச்சிக்காக இதயசுத்தியுடன் பாடுபட்டுவருவதை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

நாம் 17 பேர் கொண்ட செயற்குழுவை அமைத்து, அதன்மூலம் எம் செயற்பாடுகளை இங்கும் - புலத்திலும் நெறிப்படுத்தி வருகின்றோம். கடந்த ஆண்டு நாம் ஆறு செயற்குழுக்கூட்டங்களை கூட்டியிருந்தோம். மேலும் செயற்குழுவில் இருந்து 5 பேர்கொண்ட உபசெயற்குழு ஒன்றும் எம்மால் உருவாக்கப்பட்டு பலதிட்டங்கள் இவ் உபசெயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு – செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ் உப செயற்குழுவும் கடந்த ஆண்டு 5 தடவை கூடியுள்ளது. தமது நேரத்தை ஒதுக்கி – ஒன்றியத்தின் செயற்திட்டங்களுக்கு ஆதரவு தந்திட, இக்கூட்டங்களுக்கு சமூகம் தந்த செயற்குழு அங்கத்தவர்களுக்கு என் நன்றிகள்.

மேலும் நாம் இரண்டு வருடமும், செயற்குழுத் தேர்வை மிகவும் நேர்த்தியான முறையில் நடாத்தியிருந்தோம். அனைத்து அங்கத்தவர்களுக்கும் உரியமுறையில் தகவல்களும், ஆவணங்களும் அனுப்பப்பட்டு செயற்குழுத்தெரிவு நடாத்தப்படுகின்றது. இதற்கு நாம் எம் நேரத்தையும், காலத்தையும் பல வேலைப்பளுக்களுக்கிடையிலும் ஒதுக்கிச் செயற்பட்டு வருகின்றோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

நீங்கள் அனைவரும் இணைந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்கி புது அங்கத்தவர்களைச் சேர்த்து எம் ஒன்றியம் சிறப்புடன் இங்கும் புலத்திலும் சேவையாற்றிட வழியமைப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

**‘எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்’**

நன்றி

தி.கலைவேந்தன்.
செயலாளர்



# பொருளாளரின் செய்தி

எனது அன்புக்குரிய ஐக்கிய இராச்சியம் வாழ் வேலணை உறவுகளே. வேலணை ஒன்றியத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு வருகை தந்து - இவ்விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கின்றீர்கள். வேலணை ஒன்றியத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று, இங்கு வாழும் எங்கள் உறவுகளை ஒன்றிணைப்பதும், வேலணை வாழ் உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதுமேயாகும்.

வேலணை ஒன்றியம் தொடங்கி இதுவரை வேலணை மக்களுக்கு சில உதவிகளைச் செய்துள்ளது. அதில் முக்கியமாக தன்னிச்சையாகத் தொழில் செய்யும் வாய்ப்பைப் பல மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இன்னும் சிலருக்கு வரும் வைகாசி மாதத்தில் செய்வதாக முடிவு செய்துள்ளோம். மொத்தமாக 108 குடும்பங்களுக்கு இந்த உதவி கிடைத்துள்ளது. இச்சேவையைச் செய்வதற்கு பெரும் பணஉதவி செய்த எல்லோருக்கும் ஒன்றியம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் செய்வீர்கள் என்பது எனது நம்பிக்கை.

எனவே உங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் மூலமும், மேலும் இதுவரை அங்கத்தவர் ஆகாமல் இருப்பவர்கள் - அங்கத்தவராக இணைவதன்மூலமும் எமது ஒன்றியத்தை மேம்படுத்த முடியும்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற வரிகளுக்கமைய எல்லோருடைய ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது வேலணை ஒன்றியம் - பிரித்தானியா

**'எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்'**

நன்றி

அன்புடன் பொருளாளர்
பொன்னம்பலம் சிறீதரன்


LONDIS
OFF LICENCE AND CONVENIENT STORES
உங்களுக்குத் தேவையான
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
மற்றும் மரக்கறி, பழவகைகள்,
கடலுணவு வகைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
020 8848 1600
152 UXBRIDGE ROAD
HAYES MIDDX UB4 0JH


asa FOOD
ASA FOODS
In Anglo Asian
We Do Catering For All Occasions
Please Give Us Call
0796 953 0910
537 HIGH ROAD, WEMBLEY, HA0 2DJ
SPECIALIST IN:
• String Hoppers
• Milk Hoppers
• Piddu
• Idly
• Vegetable Rice
• Vegetable Curry

# புலம்பெயர் பார்வையில் புலத்து நினைவுகள்...

நீண்ட காலமாக இலங்கைத் திருநாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள் வடகிழக்கு தமிழ்ப்பகுதிகளில் பாரிய சமூகப்பின்னடைவுகளையும், பொருளாதார வரட்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. தொடர்ச்சியாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் மக்களின் வாழ்வாதாரங்கள் சிதைக்கப்பட்டு, அவற்றை மீளக்கட்டியெழுப்பும் திறனற்று எம்மக்கள் கூட்டம் வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைக்கு, எமது வேலணை மக்களும் விதிவிலக்கற்று முகங்கொடுத்துள்ளனர். யுத்தமும் இடப்பெயர்வும் மக்களின் இயல்பான பொருளாதார இருப்புக்களில் சிதைந்ததோடு மட்டுமல்லாது, அதனின்றும் மீண்டெழும் ஆன்ம வலுவையும் அம்மக்களிடமிருந்து காணாமல் போகச் செய்துள்ளது.

இந்நிலையிலிருந்து மீள, வேலணை மக்களுக்கு கரம் கொடுக்க முனையும் ஓர் நிறுவனமாகவே பிரித்தானியாவில் உள்ள வேலணை ஒன்றியம் எமக்கு தென்படுகின்றது. அண்மையில் பிரித்தானிய வேலணை ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட உதவித் திட்ட நிகழ்வு ஒன்றுக்கு செல்லும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. இந்நிகழ்வில் உள்ளூரில் உள்ள கல்வி மான்கள், நலன் விரும்பிகள் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். பிரித்தானிய வேலணை ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்நிகழ்வினை உள்ளூரில் உள்ள அவர்களின் பிரதிநிதிகள் வழிப்படுத்தினர். இந்நிகழ்வில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இனங்காணப்பட்ட 50 வரையிலான குடும்பங்களுக்க பிரித்தானிய அமைப்பின் உதவிகள் வழங்கப்பட்டன. சுய பொருளாதார மேம்படுத்தல் நோக்கில், கோழி வளர்க்கும் திட்டத்திற்கு வேண்டிய ஆரம்ப உதவிகளாக, கோழிக்கூடு, குஞ்சுகள், தீனி என்பனவும், தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன. எதுவித தொழிலும் செய்து வாழ முடியாக உடல் நலிவுற்ற 8 வரையிலான குடும்பங்கள் தனியாக இனங்காணப்பட்டு மாதாந்த நிதிக்கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வேலணை ஊரின் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஓர் பிரதிநிதியை பிரித்தானியாவின் வேலணை ஒன்றியம், தனது வேலணைக்கிளையின் நிர்வாக பீடத்தில் உள்வாங்கியிருப்பதால் அவ்வவ்வட்டாரத்தின் நிலைமைகள், அரச தகவல்களுக்கு அப்பால், நம்பகத்தன்மை வாய்ந்ததாக காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் வட்டார உறுப்பினர்களால் அடையாளங்காணப்பட்ட நலிவுற்றோரே பிரித்தானிய வேலணை ஒன்றியத்தின் உதவித் திட்டங்களுக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.

உள்ளூர் பிரதிநிதிகள் தமது வேலைப் பளுக்களுக்கூடாக இதனையும் ஊர் வளர்ச்சி கருதி அர்ப்பணிப்புடன் செயற்படுவது மகிழ்ச்சியான விடயமாக இருந்தது. இத்திட்டங்களின் வெற்றி பயனாளிகளின் உறுதியான ஆர்வம், தொடர்ச்சியான கண்காணிப்பு மேலதிக ஆலோசனைகள், ஊக்குவிப்புக்கள், சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இத்தொடர்ச்சியான செயற்பாடுகளின் மூலமாகவே மக்களை ஆன்ம வலுவுள்ள மக்களாக மாற்ற முடியும். ஆரம்ப உதவிகளைச் செய்வதோடு திருப்திப்பட்டு விட்டால், நிவாரணத்தக்குப் பழக்கப்பட்ட ஓர் மக்கள் கூட்டத்தையே உருவாக்க நேரிடும். ஆதலால் பிரித்தானியாவின் வேலணை ஒன்றியத்தின் பணி, ஆரம்ப உதவிகளுக்கு அப்பால், அதன் தொடர்ச்சிகளையும் பேணி அம் மக்களை ஓர் சுய ஆக்க உணர்வுள்ள மக்கள் கூட்டமாக மாற்றும் அளவுக்கு முன்வரவேண்டும்.

அத்துடன் மக்களிடையே கூட்டுறவு அடிப்படையில் தொழில்கள் உருவாக்கப்படுதல் பயனுடைய ஆலோசனையாக வேலனை மத்திய கல்லூரியின் அதிபரினால் கருத்துரைக்கப்பட்டிருந்தது. இக்கருத்து மிகவும் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகப்படுகின்றது. வேலனை மண்ணின் வளங்கள், பொருளாதாராக் கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்படல் வேண்டுமெனில், வேலணையின் வளங்கள் ஒருங்கமைக்கப்பட்டு, பயனாளிகளாக மக்கள் அதனுள் உள் வாங்கப்படவேண்டும். இதற்கான முயற்சியை பிரித்தானிய வேலணை ஒன்றியம், வேலணையின் கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் அனைவருடனும் ஆலோசனை மேற்கொண்டு முன்னெடுக்க முன் வருமாயின் வரவேற்கத்தக்கது.

திருமதி திலகவதி பரராஜசேகரன்
வேலணை - பிரான்ஸ்.

# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா - வேலணைக்கிளை
## செயலாளரின் வாழ்த்துச்செய்தி

தாய்ச்சங்கமான வேலணை ஒன்றியம் பிரித்தானியாவால் வேலணையில் கிளை ஒன்று உருவாக்கப்பட்டு அது எம் மக்களின் வறுமை நிலையை நன்கு உணர்ந்து உரிய முறையில் திறம்படச்செயற்பட்டு வருகின்றது. நிர்வாகக் கூட்டங்களில் பங்குபற்றும் உறுப்பினர்கள் சமூகமளித்து சகல விதத்திலும் எமக்கு உதவி வருகின்றார்கள்.

தாய்ச்சங்கமான பிரித்தானியா ஒன்றியம், இரண்டாவது ஆண்டு விழா மலர் வெளியீடு செய்வதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பிரித்தானிய ஒன்றியத்தின் தலைவர், நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க உங்கள் பணி
தொடர்க உங்கள் சேவை

**பா.மதியழகன்**
செயலாளர்
வேலணைக்கிளை

# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா - வேலணைக்கிளை
## பொருளாளரின் வாழ்த்துச்செய்தி

பிரித்தானியாவில் எமது புலம் பெயர் மக்களால் எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காகவும், எமது மக்களின் அடிப்படை வாழ்வாதார முன்னேற்றத்திற்காகவும், வேலணை மண்ணின் பற்றுறுதி நிறைந்த எமது உறவுகளுக்காகவும், உருவாக்கப்பட்டுள்ளது தான் வேலணை ஒன்றியம் பிரிததானியா. சொந்தப் பூமியில் அவர்கள் எண்ணும் பணிகளை செயற்படுத்துவதற்காக வேலணையில் இயங்கும் வேலணை மத்திய முன்பள்ளி மண்டபத்தில் 09.10.2013 இல் வேலணைக்கிளை ஸ்தாபிக்கப்பட்டது.

தாய்ச்சங்கமான பிரித்தானியா ஒன்றியம் - தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரையும் தெரிவுசெய்து அனுப்பினார்கள். அதில் என்னைப் பொருளாளராகத் தெரிவு செய்ததையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றேன். எமது ஒன்றியம் வேலணையின் 10 வட்டாரத்தில் இருந்தும் 14 பேரைத் தெரிவு செய்து வேலணையில் சமூக வாழ்வாதார முன்னேற்ற அமைப்பாக சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டது. நாளாந்த உதவிகளற்ற வறுமையில் வாடிய மக்களுக்கு அவர்களின் தேவை கருதி நிதியாகவும், பொருளாகவும், வழங்கி வருகின்றோம். தாய்ச்சங்கமான பிரித்தானியா ஒன்றியம் இரண்டாவது மலரை வெளியிடுவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க ஒன்றியம் வளர்க தங்கள் பணி

**இ. சிவநாதன்**
பொருளாளர்
வேலணைக்கிளை

**VELANAI ONRIYUM -UK**
**ACCOUNTS FOR THE PERIOD FROM 1.4.2014 TO 20.04.2015**
## Second Year Report

| | £ | £ | £ |
|---|---|---|---|
| **Balance as per Last Year Account 31/3/14** | | | **940.23** |
| **Income** | | | |
| Through Brochure advert 2014- 26.4.14 Annual Function | 1,230.00 | | |
| Short eats sale-26.4.14 Annual Function | 265.00 | | |
| Membership collection 2014/2015 | 325.00 | | |
| KalaiMahal Vizha Short eats sale (190+19.14) | 209.14 | | |
| Hall Deposit Refund-4.10.14 Kalaimahal Vizha Function | 150.00 | | |
| Total Interest up to March 2015 | 13.51 | | |
| 40 Stamps (Donation P Sri) | 21.20 | | |
| Membership collection 2015/2016 | 180.00 | | |
| Total Contribution for VPSEDP Fund -banked | 14,455.11 | | 16,848.96 |
| | | | **17,789.19** |
| **Expenses:-** | | | |
| Brochure Printing cost-26.4.14 Annual Function | | 640.00 | |
| Food- 26.4.14 Annual Function | | 160.00 | |
| Other expenses-Drinks etc -26.4.14 Annual Function | | 135.95 | |
| Plates & cups etc-26.4.14 Annual Function | | 74.29 | |
| VPSEDP Ticket books printing | | 60.00 | |
| Annual Function (26.4.14) Surplus money tfr to VPSEDP-Fund | | 136.00 | |
| KalaiMahal Vizha Short eats sale(190+19.14)-Tfr to VPSEDP-Fund | | 209.14 | |
| KalaiMahal Vizha Hall hire-4.10.14 | | 317.00 | |
| Food - Kalaimahal Vizha - 4.10.14 | | 100.00 | |
| Kalai Mahal Vizha Expences - 4.10.14 | | 248.64 | |
| 40 Stamps | | 21.20 | |
| Sundry Expenses | | 3.00 | |
| Annual Function 25.4.15 - Hall hire | | 317.00 | |
| Refundable Deposit - for hall hire 25.4.15 | | 150.00 | |
| 80 stamps-AGM 2015 | | 42.40 | |
| Transfer to Velanai Branch- For Phase 1 | | 1,250.00 | |
| Bank Transfer Charges | | 20.00 | |
| Transfer to Velanai Branch- For Phase 2 | | 4,750.00 | |
| Bank Transfer Charges | | 20.00 | |
| Bank Charges up to march 2015 £7.50x3 | | 22.50 | **8,677.12** |
| **Balance c/fwd as at 20.04.2015** | | | **9,112.07** |
| Represented By:- | | | |
| VPSEDP Fund | | 8415.11 | |
| Membership Account Balance | | 696.96 | |
| TOTAL | | | **9112.07** |

Prepared by:-
Mr P Sritharan
Treasurer

Reviewed By
Mr V Ilansei
Chairperson

## VELANAI ONRIYUM-UK
## VELANAI PEOPLE SELF EMPLOYMENT DEVELOPMENT PROJECT(VPSEDP) 2014/15

| | | Agreed Amount £ | Paid & Banked £ | Due £ |
|---|---|---|---|---|
| 1 | Mr Armugam Gajendran -(Lucvaa Kitchen,Ontario,Canada) | 1485.00 | 1485.00 | |
| 2 | Mr P Pararajasingham | 1385.00 | 1385.00 | |
| 3 | Mr & Mrs Yoganathan(JP& Services Ltd, B&P Enterprises Ltd ) | 1250.00 | 1250.00 | |
| 4 | Mr & Mrs Pongaimaran | 1250.00 | 1250.00 | |
| 5 | Mr & Mrs Thiruneelakandan (Lakshmis Jewellers) | 1000.00 | 1000.00 | |
| 6 | Rathy Jewellers ( Mr R Mahalingam) | 1000.00 | 1000.00 | |
| 7 | Mr T Jeyakumaran (Wine Mart - HN & WM Ltd) | 500.00 | 500.00 | |
| 8 | Mr Nadarajah Mohan (Baldock Convenience Store) | 500.00 | 500.00 | |
| 9 | Mr & Mrs Kesavan(Kesarasingam) - K7 Enterprises | 375.00 | 375.00 | |
| 10 | Mr T Sureskumaran(Londis) | 250.00 | 250.00 | |
| 11 | Mr Vijayan Poologasundrampillai | 250.00 | 250.00 | |
| 12 | Mr B Surendran | 250.00 | 250.00 | |
| 13 | Mr P Thigarasa (Denmark) | 200.00 | 200.00 | |
| 14 | Mr Saran Sivachandran | 125.00 | 125.00 | |
| 15 | Mr A Poologasundrampillai | 125.00 | 125.00 | |
| 16 | Mrs T Arasakesari | 125.00 | 125.00 | |
| 17 | Mrs Sothilingam | 125.00 | 125.00 | |
| 18 | Mr & Mrs Thiruvarasu | 125.00 | 125.00 | |
| 19 | Mr T Kaneswaran | 125.00 | 125.00 | |
| 20 | Mr Sathasivam | 125.00 | 125.00 | |
| 21 | Mr Kandasamy Theesan | 125.00 | 125.00 | |
| 22 | Mr Kandasamy Ravichandran(Swiss) | 125.00 | 125.00 | |
| 23 | Mr M Jeyaruban | 125.00 | 125.00 | |
| 24 | Ms Kithika&Renusha Jeyaruban | 125.00 | 125.00 | |
| 25 | Rathy Jewellers - Charity Box Money | 104.97 | 104.97 | |
| 26 | Mr P Vijeyaruban | 100.00 | 100.00 | |
| 27 | Mr P Thaneswaran | 100.00 | 100.00 | |
| 28 | Mr Thipakar | 50.00 | 50.00 | |
| 29 | Mr & Mrs Sureswaran | 50.00 | 50.00 | |
| 30 | Mr Anthivannan | 50.00 | 50.00 | |
| 31 | Mr & Mrs Sathiyanathan | 50.00 | 50.00 | |
| 32 | Mr P Kamaleswaran | 50.00 | 50.00 | |
| 33 | Mr R Parameswaran | 50.00 | 50.00 | |
| 34 | Mr R Rajanikanth | 50.00 | 50.00 | |
| 35 | Mr R Niranjan | 50.00 | 50.00 | |
| 36 | Mr K Mohan | 50.00 | 50.00 | |
| 37 | Miss J Visakan | 25.00 | 25.00 | |
| 38 | Miss S Visakan | 25.00 | 25.00 | |
| 39 | Mr I Ilansei | 25.00 | 25.00 | |
| 40 | Mr Rajakareiar | 25.00 | 25.00 | |
| 41 | Mr Paskaran | 10.00 | 10.00 | |
| | **VO-UK Committee Members 2014/15** | | | |
| 42 | Mr & Mrs Gnananthan(ASA Food) | 375.00 | 250.00 | 125.00 |
| 43 | Mr & Mrs Ilansei | 250.00 | 250.00 | |
| 44 | Mr & Mrs Sivakumaran | 250.00 | 250.00 | |
| 45 | Mr & Mrs Sritharan | 125.00 | 125.00 | |
| 46 | Mr & Mrs Kalaiventhan | 125.00 | 125.00 | |
| 47 | Mr & Mrs Sivachandran | 125.00 | 125.00 | |
| 48 | Mr K Ramachandran | 125.00 | 125.00 | |
| 49 | Mr & Mrs Gajanrajh | 125.00 | 125.00 | |
| 50 | Mr & Mrs Arulrajah | 125.00 | 125.00 | |
| 51 | Mr & Mrs Sivanesanathan | 125.00 | 125.00 | |
| 52 | Mr & Mrs Arulan | 125.00 | 125.00 | |
| 53 | Mr & Mrs Jegatheeswaran | 125.00 | 125.00 | |
| 54 | Mr & Mrs Jeyagugan | 125.00 | 125.00 | |
| 55 | Mr & Mrs Satheesan | 125.00 | 125.00 | |
| 56 | Mr & Mrs Muganthan | 50.00 | 50.00 | |
| | **Transfer from Main Account-Funds raised from our function** | | | |
| | VO-UK 26/04/14 - Function Surplus Fund ( See page 14) | 136.00 | 136.00 | |
| | Kalaimagal Vizha 4.10.14-Shorteats Sales (See page 14) | 209.14 | 209.14 | |
| | **TOTAL FUND RECEIVED (See page 14)** | 14580.11 | **14455.11** | 125.00 |
| | **Less :- Transfer to Velanai Branch** | Net £ | Gross £ | Charges £ |
| | 16.12.2013 (For VPSEDP Phase 1) | 1250.00 | 1270.00 | 20.00 |
| | 16.03.2015(For VPSEDP Phase 2 - Part payment) | 4750.00 | 4770.00 | 20.00 |
| | **TOTAL FUND SPEND** | | **6040.00** | |
| | **BALANCE AT BANK As at 20.04.2015 ( See page 14)** | | **8415.11** | |

**Prepared By:-**
Mr P Sritharan
Treasurer

**Reviewed By:-**
Mr V Ilansei
Chairperson

# SKC

Estd. 1992

## SRIKANTH & CO. SOLICITORS

We practice in the following areas of law:

- CONSUMER PROBLEMS
- CONVEYANCING – RESIDENTIAL
- CONVEYANCING – COMMERCIAL
- EMPLOYMENT LAW
- HOUSING MATTERS
- IMMIGRATION
- LANDLORD & TENANT
- LICENSING – COMMERCIAL PREMISES
- LITIGATION – CIVIL & COMMERCIAL
- MATRIMONIAL & FAMILY LAW
- WELFARE MATTERS
- WILLS & PROBATE

Authorised and regulated by the Solicitors Regulation Authority (SRA No: 564285)


**557 HIGH ROAD, WEMBLEY, MIDDLESEX, HA0 2DW**

TEL: **020 8795 0648** FAX: **020 8795 0649** MOB: **07831195979**

EMAIL: **info@srikanthsolicitors.co.uk**

WEBSITE: **www.srikanthsolicitors.co.uk**

The Law Society Accredited – Conveyancing Quality



# வேலணைக் கிளைத் தலைவரின் செய்தி

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா, பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடையும் வேளையில் அது இதுவரை எவற்றை சாதித்தது - இனிமேல் என்ன செய்யப்போகின்றது என்பதை மீளாய்வு செய்வதாக இவ்வறிக்கை அமைகின்றது.

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா, அதன் நிதிமூலம் ஏனைய வளங்களைத் திரட்டும் சிரமமான பாரிய பணியை பிரித்தானிய தலைமை செய்து வருகின்றது. இதற்கு உதவிசெய்யும் வகையில் வேலணைக் கிளை, பயனாளிகள் தெரிவு – விநியோகம் கண்காணிப்பு என்பவற்றை முறைப்படுத்தி வருகின்றது.

வேலணையில் 10 வட்டாரங்களை உள்ளடக்கி பாரிய பிரதேசத்தை இக்கிளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பரவலான முறையில் அங்கத்தவர்களைக் கொண்டு, பொதுச் சபை நிர்வாகசபை அமைக்கப்பபட்டு, இயங்கி வருகின்றது. கூட்டங்களுக்கு அங்கத்தவர் வருகை திருப்தியளிக்காத முறையில் இருந்தாலும், வட்டாரங்களைப் பிரிதிநிதித்துவம் செய்கின்ற உறுப்பினர்கள் தமது பணியினை செவ்வனே செய்து வருகின்றனர்.

ஒன்றியம் ஆரம்பித்த காலத்தில் ஒரு தொகைப்பணத்தை (ரூபா 90,000) வறியநிலையில் உள்ள மக்களுக்கு பகிர்ந்து அளிக்க – வேலணைக் கிளைக்கு அனுப்பி அதை எம் மூலம் நிறைவேற்றியது. இது தங்கள் இலக்கினை நிறைவுசெய்ய முடியாது என்பதை உணர்ந்த வேலணை ஒன்றியம் - பிரித்தானியா நீடித்த பயனைக் கொடுக்கும் வகையில் திட்டங்களை வகுத்து அதை எம் மூலம் செயற்படுத்தி வருகின்றது.

இரண்டாவது கட்டமாக வேலணை ஒன்றியம் - பிரித்தானியா, பிரித்தானியாவில் சேகரிக்கப்பட்ட உடுப்பு வகைகளை எமக்கு அனுப்பி – எம்மூலம் சுமார் 200 குடும்பங்களுக்கு அது பகிர்ந்தளிக்கப்பட்டது.

அடுத்தகட்டமாக, எம்மால் பரிந்துரைக்கப்பட்ட 108 குடும்பங்களில், வட்டாரத்திற்கு ஒரு குடும்பமாக 10 குடும்பங்களுக்கு தலா ரூபா 25,000 நிதி பிரித்தானியாவில் இருந்து அனுப்பப்பட்டு 10 குடும்பங்களுக்கும் ரூபா 25,000 பெறுமதியான கோழிக்கூடு, குஞ்சுகள், 4 மாதம் வளர்க்கப் போதியதான கோழித்தீன் ஆகியன வாங்கி வழங்கப்பட்டது.

(05.04.2015) தற்போது இது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, 40 பேர்களுக்குக் கோழிக்கூடுகள், குஞ்சுகள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு வேலணை கால்நடை மருத்துவர் உதவியும், ஆலோசனையும் பெறப்படுகின்றது. உரிய வகையில் மருந்து வகைகள் ஊசிகள் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டம் 98% வெற்றி அளித்து வருகின்றது. கோழி வளர்ப்பின் நடைமுறை பிரச்சனைகள் பற்றி ஒன்றிய வேலணைக் கிளைப் பிரதிநிதிகள் வீடுகளுக்குச் சென்று மதிப்பீடு செய்து வருகின்றனர். இத்துடன் தையல் இயந்திரம் - நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றையும் வழங்கி வருகின்றார்கள்.

கடந்தகால யுத்தம், இடப் பெயர்வுகள் எமது பிரதேசத்தையும் விட்டு வைக்கவில்லை. இன்று பல நூறு இளம் விதவைகள் (25 வயதிற்கு உட்பட்டவர்கள்) சிறு குழந்தைகளுடன் வாழ்க்கைப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். மறுபுறம் பிள்ளைகள் இல்லாத வயோதிபப் பெற்றோர், பிள்ளைகளால் கைவிடப்பட்ட வயோதிபப் பெற்றோர் ஆகியோர் என்ன செய்வது என்று தெரியாமல் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றார்கள். எமது உதவி மூலம் இவர்கள் வாழ்வில் ஒளி பிறக்கட்டும் என்ற நம்பிக்கையில் பணியைத் தொடர்வோம்.

நன்றி.

ந. ஜெகநாதன்
தலைவர்
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா – வேலணைக் கிளை

# VELANAI ONRIYUM – UK

05/04/2015


**Members: 2014-15**

**Chairperson**
Mr V. Ilansei

**Secretary**
Mr T. Kalaiventhan

**Treasurer**
Mr P. Sritharan

**Assist. Chairperson**
Mr S. Sivachandran

**Assist.Secretary**
Mrs C Gajanrajh

**Assist. Treasurer**
Mrs P Arulrajah

**Committee Members**
Mr T Sivakumaran
Mrs A. Sivanesanathan
Mr V Thavanesan
Mr A Nothanarajah
Mrs K Arulan
Mrs M Jegatheeswaran
Mr S Mugunthan
Mr A Jeyagugan
Mr G Gnananthan
Mr S Satheesan
Mr K Ramachandran


வேலணை கிழக்கு 3ம் வட்டாரம் - வேலணை எனும் விலாசத்தில் வசிக்கும் மு சரோஜினிதேவி ஆகிய நான், வேலணை ஒன்றியம் பிரித்தானியாவால் எனக்கு பதினொரு மாதங்களுக்கு மாதாமாதம் ரூபா 2000 ஆகவும்- பன்னிரண்டாம் மாதம் ரூபா 3000 ஆகவும் ஆக மொத்தம் வழங்கப்பட உள்ள ரூபா 25000 உதவிப் பணத்தில் முதல் மாதப் பண உதவியாக ரூபா 2000 ஐப் பெற்றுக்கொண்டேன் என்பதை உறுதிப்படுத்தியும், மேலும் கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாக ஒத்துக்கொண்டும் இப்பத்திரத்தில் கையொப்பமிடுகின்றேன்.

<u>நிபந்தனைகள்:</u>

1.மேற்குறிப்பிட்ட உதவிப்பணத்தை எனதும்-எனது குடும்பத்தினதும் மாதாந்த செலவுகளிற்கு மட்டுமே பயன்படுத்துவேன் என உறுதிப் படுத்துகின்றேன். மேலும் இப் பண உதவி ஒரு வருடத்திற்கு மட்டுமே தரப்படுமென்பதை அறிவேன் என்பதையும் உறுதிப் படுத்துகின்றேன்.

2.கிடைக்கப்பெற்ற பண உதவியின் உச்சப்பயன்பாட்டைப்பெற்று எனது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதுடன் வேலணை ஒன்றியம் பிரித்தானியாவினதும் அதன் வேலணைக்கிளையினதும் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

3.தவிர்க்கமுடியாத காரணங்களால் இப் பண உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து வேலணை ஒன்றியம் பிரித்தானியாவின் வேலணைக் கிளையுடன் தொடர்புகொண்டு அதன் அறிவுறுத்தல்களையும் கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ளுதல்.

இப்பத்திரத்தில் கையொப்பமிடும் இவ்வேளையில் இத்திட்டத்திற்கு கைகொடுத்த அனைத்து புலம்பெயர் நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| உதவிபெற்றவர் விபரம் | வேலணைக்கிளைசார்பாக |
|---|---|
| பெயர்: மு சரோஜினிதேவி | பெயர்: [illegible] |
| திகதி 4/4/2015 | பதவி: |
| கையொப்பம்: [illegible] | கையொப்பம்: [illegible] |

'எம் ஊரின் அபிவிருத்தியினூடே
எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்'


**37 Ladywood Road, Surbiton, Surrey, KT6 7PB**

**Chairperson:** 07855558019 **Secretary:** 07930543057 **Treasurer:** 07746723398

## VELANAI ONRIYUM -UK - Velanai Branch
## ACCOUNTS FOR THE PERIOD FROM 20.4.2014 TO 20.04.2015

| | SL Rs | SL Rs | SL Rs |
|---|---|---|---|
| **20.04.2014 Deposit ( £453 sent on 6.1.14( Rs 95809 -Rs 90000))** | | | **5,809.00** |
| Interest Received ( 20.4.14-28.11.14) | 124.60 | | |
| Interest Received ( 29.11.14-31.03.15) | 1,640.44 | | |
| Total Interest Received | | | 1,765:04 |
| **Money Received From VO-UK** | | | |
| 18.12.2014-Received from UK £1250 | 250,453.38 | | |
| 19.03.2014-Received from UK £4750 | 930,090.75 | | |
| | | | 1,180,544.13 |
| | | | 1,188,118.17 |
| **Taken out for Phase 1** | | | |
| 24.12.2014 | | 80,000.00 | |
| 31.12.2014 | | 70,000.00 | |
| 26.01.2015 | | 50,000.00 | |
| **Taken out for Phase 2 / Phase 1** | | | |
| 20.03.2015 | | 500,000.00 | |
| 07.04.2015 | | 400,000.00 | |
| 16.04.2015 | | 83,000.00 | |
| Total Money Withdrawn | | | 1,183,000.00 |
| **Balance c/fwd as at 20/04/2015** | | | **5,118.17** |
| | | | |
| **Total Money Withdrawn up to 20.04.2015** | | | 1,183,000.00 |
| **Represented by:-** | | | |
| VPSEDP -Phase 1 (See Page 20 ) | 221,150.00 | | |
| VPSEDP -Phase 2 (See Page 21) | 937,800.00 | | |
| | | 1,158,950.00 | |
| **In Hand- 20.04.2015**<br>(Will be using for Phase 1-Chicks Food for 10 families due 25.4.15 (10 x Rs 1775)-see page 46) | | **24,050.00** | |
| Total | | | 1,183,000.00 |
| **Prepared by:-**<br>Mr V Ilansei<br>VO-UK Chairperson | **Agreed By**<br>Mr R Sivanathan<br>VO-UK Velanai -Treasurer | | |

# வேலணை ஒன்றியம் – பிரித்தானியா
# VELANAI ONRIYUM - UK

Regd. No : J/V/VOP/2014/01

வேலணை வடக்கு,
வேலணை – 05.

Velanai North, Velanai - 05.

201......

| | | | |
|---|---|---|---|
| 24.01.20[illegible] | முதற்கட்ட உதவி<br>10 குடும்பங்களுக்கு. | | |
| | 10- கோழிக்கூடு 10x10000 | 100000 | 00 |
| | கோழிக்கூடு பொருத்தியவர்கள் சாப்பாட்டு செலவு 4 பேர் 1½ நாள் | 1500 | 00 |
| | 200 கோழிக் குஞ்சு 200x260 | 52000 | 00 |
| | 10 பை கோழித் தீனி முதற்கட்டம் | 20500 | 00 |
| | 10 பை " " இரண்டாம் கட்டம் | 17750 | 00 |
| | 10 பை " மூன்றாம் கட்டம் | 17500 | 00 |
| | 10 நீர் தட்டு 300x10 | 3000 | 00 |
| | கோழித் தீன் வாகனத்தில் ஏற்றி இறக்கிய கூலி | 300 | 00 |
| | 3 தரம் வாகனக் கூலி யாழ் - வேலணை | 1750 | 00 |
| | 10 கோழிக்கூடு 1-10 வட்டாரம் கொண்டு சென்ற கூலி | 3500 | 00 |
| | கூட்ட அழைப்பிதழ் 100 | 350 | 00 |
| | கூட்ட விருந்துபசாரச் செலவு | 3000 | 00 |
| | மொத்தம் | 221150 | 00 |

[illegible] — உப தலைவர்

பா. மதிபதன் [illegible] — செயலாளர்

[illegible] — பொருளாளர்

வேலணை ஒன்றியம் (பிரித்தானியா) Regd. No. J/V/VOP/2014/01 Date 28/03/... VELANAI ONRIYUM (UK)

# வேலணை ஒன்றியம் – பிரித்தானியா
# VELANAI ONRIYUM - UK

Regd. No : J/V/VOP/2014/01

வேலணை வட.கி.கு.
வேலணை – 05.

Velanai North, Velanai - 05.

..................201.......

04-04-2015 இரண்டாம் கட்ட உதவி

50 பயனாளிகள்.

| | |
|---|---|
| 40 கோழிக் கூடு 12000x40 | 480000 00 |
| 40 கோழிக்கூடு வேலணையில் வைத்து 4 பேர் 5 நாள் தங்கி நின்று பொருத்தியவர்கள் | 5000 00 |
| சாப்பாட்டு கணக்கு | 700 00 |
| கோழிக் கூடுகள் தூக்கி அடுக்கியமை | |
| 40 பைக்கற் குஞ்சுத்தீன் 2025x40 | 81000 00 |
| 40 பைக்கற்றும் வாகனத்தில் ஏற்றி இறக்கிய கூலி | 400 00 |
| 40 " " வாகனக் கூலி யாழ்-வேலணை | 1000 00 |
| 40 தண்ணீர்ப் பாத்திரம் 300x40 | 12000 00 |
| 40 மாஸ் பாத்திரம் 300x40 | 12000 00 |
| 40 கூடுகளும் 10 வட்டாரத்துக்கு கொண்டுபோய் கொடுத்த கூலி 350x40. | 14000 00 |
| 1000 குஞ்சுகள் 260 ரூபாபடி உதீன் பைக்கும் | 264100 00 |
| 2. தையல் இயந்திரம் 22500x2. | 45000 00 |
| தையல் இயந்திரம் யாழ்-வேலணை ஏற்றி வந்த வாகனக் கூலி | 1000 00 |
| 2 வட்டாரத்திற்கும் ஏற்றிக் கொடுத்த வாகனக் கூலி | 700 00 |
| 8 பேர் ஓய்வூதியம் 2000x8. | 16000 00 |
| கூட்ட அழைப்பிதழ் 100 | 900 00 |
| கூட்ட விருந்துபசாரச் செலவு | 4000 00 |
| மொத்தம் | 937800.00 |
| 1ம் கட்டம் | 221150 00 |
| | 1158950 00 |

வேலணை ஒன்றியம் (பிரித்தானியா) வேலணை
Regd. No. J/V/VOP/2014/01
Date: 28/03/2014
VELANAI
VELANAI ONRIYUM (UK)

உப தலைவர்

பா.மதியுகா
செயலாளர்

பொருளாளர்

# யாப்பு

1) வேலணை ஒன்றியம் - பிரித்தானியா, "வேலணை ஒன்றியம் பிரித்தானியா" என்ற பெயரில் அழைக்கப்படும்.

2) வேலணை ஒன்றியம் பிரித்தானியா தனது அங்கத்தவர்களை பின்கண்ட அடிப்படையில் தெரிவு செய்யும்.

   a) வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

   b) தாய் / தகப்பன் அல்லது பாட்டன் / பாட்டி வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

   c) கணவனோ / மனைவியோ மேற்கண்ட இரு தகுதிகளில் ஒன்றைக் கொண்டவராக இருத்தல்.

## 3) செயற்குழு அங்கத்தவர்களுக்கான தகுதி

   a) பிரிவு 2 இல் பகுதி (a) அல்லது பகுதி (b) தகுதி கொண்டவரே செயற்குழுவில் அங்கத்தவராகும் தகுதி உடையவர்.

   b) பிரிவு 2 இல் பகுதி (c) இன் அடிப்படையில் இணைந்த அங்கத்தவர்க்கு – செயற்குழுவில் அங்கம் வகிக்கும் உரிமை இல்லை.

   c) பிரிவு 2 இல் பகுதி (a) அல்லது பகுதி (b) இன் அடிப்படையில் இணைந்த அங்கத்தவர் 'full membership' தகுதி உடையவர். இவருக்கு செயற்குழுவில் அங்கம் வகிக்கும் உரிமையும், செயற்குழுத் தெரிவில் வாக்களிக்கும் உரிமையும் உண்டு.

   d) பிரிவு 2 இல் பகுதி (C) இன் அடிப்படையில் இணைந்த அங்கத்தவர் (Secondary membership) செயற்குழுத் தெரிவில் வாக்களிக்கும் உரிமை மட்டும் கொண்டவராவார். இவருக்குச் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் உரிமை இல்லை.

## 4) செயற்குழுவின் காலம்

   a) செயற்குழு தெரிவு செய்யப்பட்டு 12 மாத காலத்திற்குள் அடுத்த ஆண்டுக்கான செயற்குழு தெரிவு செய்யப்படல் வேண்டும்.

   b) ஏதாவது காரணத்தால் செயற்குழுத்தெரிவு 12 மாதத்திற்குள் நடாத்தப்படாவிட்டால், அடுத்த 3 மாதத்திற்குள் செயற்குழுத் தெரிவு நடாத்தப் படல் வேண்டும். அவ்வாறு நடாத்தப்படாதவிடத்து செயற்குழு தன்னிச்சையாகக் கலைக்கப்பட்டு விடும். அதாவது தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவின் காலம் 12 மாதம் ஆகும். ஏதாவது தவிர்க்க முடியாத காரணமானால் செயற்குழுவின் காலம் 15 மாதம் வரையுமே நீடிக்க முடியும். 15 மாத முடிவில் செயற்குழு தன்னிச்சையாகவே கலைக்கப்பட்டு விடும்.

   c) செயற்குழுவின் ஆண்டுத் தேர்தல் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் நடாத்தப்படல் வேண்டும். செயற்குழுவின் காலமானது வைகாசி 1ஆம் திகதியிலிருந்து சித்திரை 30 ஆம் திகதி வரையிலான 1 வருட காலப்பகுதியாக அமையும்.

   d) செயற்குழுவானது ஆகக் குறைந்தது 11 அங்கத்தவர்களையும் ஆகக் கூடுதலாக 23 அங்கத்தவர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

e) செயற்குழுவானது தலைவர் - செயலாளர் - பொருளாளர் உபதலைவர் - உபசெயலாளர் - உபபொருளாளர் ஆகிய ஆறு பதவிகளுடன். மேலதிகமாக ஆகக் குறைந்தது 5 அங்கத்தவர்களையும் , ஆகக் கூடுதலாக 17 அங்கத்தவர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

f) செயற்குழுவில் ஒருவர் பொதுவாக ஒரே பதவியில் தொடர்ச்சியாக இரண்டு வருடமே இருக்க முடியும். — அவர் தொடர்ந்தும் அதே பதவியில் இருவருடங்களிற்கும் கூடுதலாக இருக்க விரும்புமிடத்து. நடப்பு ஆண்டு செயற்குழுவின் இறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதன் பின்னே அவர் தன் பதவிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். இவ்விதி செயற்குழுவில் தலைவர் - செயலாளர் - பொருளாளர் - உப தலைவர் - உப செயலாளர் - உப பொருளாளர் ஆகிய பதவிகளுக்கே உரியது ஆகும். எவ்வாறாயினும் செயற்குழுத்தேர்தல் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் நடாத்தப்படல் வேண்டும்.

g) செயற்குழு மூன்று பிரிவுகளாக அமைந்திருக்கும்

i) உயர் செயற்குழு

தலைவர் - செயலாளர் - பொருளாளர்

ii) மத்திய செயற்குழு

தலைவர் - செயலாளர் - பொருளாளர்

உப தலைவர் - உப செயலாளர் - உபபொருளாளர்

iii) பொதுக் குழு

11 இலிருந்து 23 வரையான அங்கத்தவர்களை உள்ளடக்கிய செயற்குழு

**h) உயர் செயற்குழு**

ஒன்றியத்தின் செயற்பாடுகளில் ஏதும் அவசர முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய தருணத்தில் உயர் செயற்குழு கூடி சில முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டது. ஆனால் உயர் செயற்குழுவிற்கு ஒன்றியத்தின் யாப்பில் மாற்றம் செய்யவோ அங்கத்தவர் எவர் மேலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவோ. யாரையும் நீக்கவோ அதிகாரம் கிடையாது.

இவ் உயர் செயற்குழுவில் உள்ள மூவருமே வங்கிக் கணக்கில் கையொப்பமிடும் அதிகாரத்தைக் கொண்டவராக இருப்பர். இம் மூவரில் இருவரின் கையெழுத்து — பொருளாளர் உட்பட காசோலையில் இடப்படல் வேண்டும். ஆக இரண்டு விதமாக மட்டுமே காசோலைக் கையெழுத் தமையும்.

i) பொருளாளர் - செயலாளர்

ii) பொருளாளர் - தலைவர்

இம் மூவரின் பொறுப்புக்களும் பின்வருமாறு வரையறுக்கப்படும்.

## தலைவரின் பொறுப்புக்கள் :-

தலைவர் ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டங்களை தலைமை தாங்கி நடாத்தும் அதிகாரம் கொண்டவர். செயற்குழுக் கூட்டங்களில் ஒழுங்கையும், அமைதியையும் பேணும் பொறுப்பு இவருக்குண்டு. ஒன்றியத்தில், பொறுப்பிலுள்ளவர்களின் பொறுப்புக்களை உணர்த்தி, ஒன்றியத்தின் செயற்பாடுகளை நடாத்தும் அதிகாரமும் - பொறுப்பும் தலைவருக்குண்டு. செயற்குழுக் கூட்டங்களை நடாத்தி, ஏதும் கருத்தில் - கோட்பாட்டில் முடிவெடுப்பதற்கு வாக்கெடுப்புத் தேவைப்படின், முறைப்படி வாக்கெடுப்பை நடாத்தி — முடிவுகளைத் தெரிவிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு. வாக்கெடுப்புக்களில் தலைவர் பொதுவாக வாக்கை அளிக்கத் தேவையில்லை.

ஆனால் வாக்களிப்பு சமமாக இருக்குமிடத்து, தலைவரின் வாக்கு எப்பக்கம் செல்கின்றதோ, அப்பக்கத்தின் கருத்து ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். மேலும் தலைவர் ஒன்றியத்தின் வருடாந்த நிகழ்வுகளில் - நிகழ்வுகளைத் தலைமை தாங்கி நடாத்தும் பொறுப்பும் கொண்டவராவார்.

ஒரு கூட்டத்திற்கோ — நிகழ்விற்கோ தலைவர் வராதவிடத்து அப்பொறுப்பை உப தலைவர் பொறுப்பெடுத்துச் செய்யும் கடமைப்பாடு கொண்டவர்.

## செயலாளரின் பொறுப்புக்கள் :

செயலாளர் செயற்குழுவின் கூட்டத்தைக் கூட்டும் பொறுப்பைக் கொண்டவர். தெரிவு செய்யப்பட்ட திகதிகளில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் செயற்குழுக் கூட்டத்தை உரிய நேரத்தில் கூட்டும் பொறுப்பும் இவருக்குண்டு. மேலும் கூட்டங்களுக்கான நேர காலங்களை உரிய பொழுதில் செயற்குழு உறுப்பினர்களுக்குத் தெரிவித்தலும் இவரின் கடமையாகும்.

ஒன்றியத்தின் அங்கத்தவர்களின் விபரங்களைக் கோர்வைப்படுத்தி வைத்திருத்தலும், மாற்றங்களை உடனுக்குடன் பதிவு செய்து கோர்வையை முறையாகவும் - சரியாகவும் வைத்திருத்தலும் இவரின் பொறுப்பாகும்.

அங்கத்தவர்களின் தொடர்புகளை உறுதிப்படுத்தி அவர்களின் முகவரி விலாசம் - தொலைபேசி இலக்கம் - மின்னஞ்சல் இலக்கம் போன்றவற்றை சரியான முறையில் பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

ஒன்றியத்தின் செயற்பாடுகளையும், ஒன்றியம் செய்யும் வருடாந்த நிகழ்வுகளையும் உரிய முறையில் ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்கும் பொறுப்பும் இவரையே சாரும். அங்கத்தவர்களின் அங்கத்துவப் பணத்தை உரிய நேரத்தில் பெற்று பொருளாளரிடம் கையளிக்கும் பொறுப்பும் இவருடையது ஆகும்.

ஒன்றியத்தின் அங்கத்தவர்களோ — அல்லது செயற்குழு அங்கத்தவர்களோ — ஏதும் முக்கிய விடயமாக பொதுக்குழுவை அல்லது முழு அங்கத்தவர் கூட்டத்தைக் கூட்டக் கோரின் (ஆகக் குறைந்த முழு எண்ணிக்கை பொதுக்குழுவிற்கு 9 ஆகவும், முழு அங்கத்தவர் கூட்டத்திற்கு 17 ஆகவும் இருத்தல் வேண்டும்), ஒன்றியத்தின் யாப்பின் அடிப்படையில் செயற்பட்டு, உரிய ஒழுங்குகளைச் செய்யும் பொறுப்பும் இவருக்குண்டு.

ஒன்றியத்தின் அங்கத்தவர்மேலோ, பொதுக்குழு அங்கத்தவர்மேலோ, ஏதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தேவை ஏற்படின் - ஒன்றியத்தின் யாப்பின் பிரகாரம் செயற்குழுவைக் கூட்டும் அதிகாரம் இவரிற்குண்டு.

ஒன்றியத்தின் பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகளை உரிய முறையில் ஆவணப்படுத்துதலும், அடுத்த கூட்டத்தில் சென்ற கூட்ட அறிக்கையை வாசிக்கும் பொறுப்பும் இவருடையது ஆகும். இச் செயற்பாடுகளில் இவர் உப செயலாளரின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்றியத்தின் வருடாந்த நிகழ்வுகளை உரிய முறையில் செயற்குழுவுக்கும் - அங்கத்தவர்களுக்கும் தெரியப் படுத்தும் பொறுப்பும் இவருடையது ஆகும்.

**பொருளாளர் :-**

- ஒவ்வொரு பொதுக் குழுக் கூட்டத்திலும் ஒன்றியத்தின் பணநிலைமையை ஆதாரத்துடன் தெரியப்படுத்துதல்.
- ஆண்டு முடிவில் முழு ஆண்டுக்குமான கணக்கைத் தயாரித்து தலைவர் - செயலாளர் ஆகியோரின் ஒப்பத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- வங்கிக் கணக்கைப் பராமரித்தல், காசோலைப் புத்தகங்கள், வங்கியின் மாதாந்த statements போன்றவற்றை ஆவணப்படுத்தி வைத்திருத்தல்.
- சங்கம் பிரித்தானியாவிலும், வேலணையிலும் நடாத்தும் செயற்பாடுகளுக்கான வரவு – செலவு கணக்குகளைத் தயாரித்தல் - ஆவணப் படுத்துதல் .
- சங்கத்திற்குக் கிடைக்கும் பணவரவுகளை உடனுக்குடன் வங்கியில் இடும் பொறுப்பு.
- ஒன்றியம் நடாத்தும் வருடாந்த நிகழ்வுகளில் வரும் சிற்றுண்டி விற்பனை வருமானத்தைக் கணக்கெடுத்து வாங்கி வங்கியிலிடும் பொறுப்பும் இவருடையது ஆகும்.

## 5) செயற்குழுத் தேர்தல்

ஒன்றியத்தின் செயற்குழுத் தேர்தல் வருடாவருடம் நடாத்தப்படும். அனைத்து அங்கத்தவர்களுக்கும் பங்குனி மாத இறுதியில் அல்லது சித்திரை மாதத் தொடக்கத்தில் செயற்குழுத் தெரிவுக்கான விண்ணப்பப் படிவமும், அத்துடன் காலக் கெடு – ஒன்றியத்தின் தெரிவு முறை ஆகியன அடங்கிய கடிதமும் அனுப்பி வைக்கப்படும்.

தலைவர் - உபதலைவர் - செயலாளர் - உப செயலாளர் - பொருளாளர், உப பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு ஒருவருக்கு மேல் விண்ணப்பிக்குமிடத்து, அவர்களுக்கு இவ்விபரம் தெரிவிக்கப்பட்டு எவராவது தமது விண்ணப்பத்தை மாற்றவோ மீளப் பெறவோ அவகாசம் வழங்கப்படும். இறுதி முடிவுத் திகதியில் மேற்கண்ட 6 பதவிகளில் ஏதும் பதவிக்கோ – பதவிகளுக்கோ ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிடைக்குமிடத்து இப் பதவிக்கான தேர்தல், ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டமும் ஆண்டுக் கலை விழாவும் நடக்கும் சித்திரை மாதத்தில் அங்கத்தவர்கள் முன்னிலையில் நடாத்தப்படும். இத் தேர்தலில் வாக்களிப்போர் அங்கத்துவத் தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும். அங்கத்தவர் அல்லாதோரோ – அங்கத்துவப் பணத்தை செலுத்தாதோரோ வாக்களிக்க முடியாது. இவ்வாறே பொதுக் குழு அங்கத்தவர்களுக்கும் - தேவைக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்படுமிடத்து தேர்தல் நடாத்தப்படும்.

6) **வேலணை ஒன்றியத்தின் செயற்பாடுகள்**

வேலணை ஒன்றியம் பிரித்தானியா, வேலணையைப் பிறப்பிடமாகவோ அல்லது நிரந்தர வசிப்பிடமாகவோ கொண்டு – வேலணையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு உதவிடும் நோக்கிலும், பிரித்தானியாவில் வாழ்கின்ற வேலணை மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடனும் தனது செயற்பாடுகளை ஆற்றும்.

வேலணை ஒன்றியம் பிரித்தானியா மேற்கண்ட நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வேலணையில் ஒரு கிளைச் சங்கத்தை தாபித்து அதற்குரிய யாப்பைச் சரிபார்த்து – அவர்கள் மூலம் தனது செயற்பாடுகளை வேலணையில் நடாத்தும். இவ் வேலணைக் கிளையின் யாப்பில் இது பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

வேலணை ஒன்றியம் பிரித்தானியா – மேற்கண்ட நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இங்கு பிரித்தானியாவில் இரண்டு வருடாந்த கலை நிகழ்வுகளை வருடா வருடம் ஐப்பசி மாதத்திலும் - சித்திரை மாதத்திலும் நடாத்தும்.

வேலணை ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டம் நடப்பு வருடத்தில் 6 தடவைகள் கூட்டப்படல் வேண்டும்.

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா தனது செயற்பாடுகளுக்காக 5 பேர் கொண்ட உப செயற்குழுவை அமைத்து செயற்பட அதிகாரம் கொண்டது. இச் செயற்குழுவில் - உயர் செயற்குழு அங்கத்தவர் மூவரில் இருவராவது இடம் பெறல் வேண்டும். இவ் உப செயற்குழு – தேவைப்படுமிடத்து குறுகிய கால அவகாசத்தில் கூடி சில அவசர முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டது. இவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் - அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## 7. அங்கத்தவர் பணம்

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா தனது அங்கத்தவர்களிடம் இருந்து அங்கத்துவப் பணத்தை பின்கண்ட தொகையில் அறவிடும்.

தனி நபர் - £15 (வருட சந்தா)

குடும்பம் (2) £25 (வருட சந்தா)

குடும்பம் (3) £35 (வருட சந்தா)

குடும்பம் (3) £35 ( வருட சந்தா)

அங்கத்துவப் பணம் வைகாசி 1 முதல் சித்திரை 30 வரையுமான 1 வருட காலப் பகுதிக்குரியதாகும். எவரும் இடையில் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி அங்கத்தவராக இணைய விரும்பினும் அங்கத்துவப் பணத்திலும் அதன் கால எல்லையிலும் எவ்வித மாற்றமும் இருக்க மாட்டாது.

**குடும்பம்** : கணவன் + மனைவி + மணமுடிக்காத பிள்ளைகள் (Age >18)
மணமுடித்த பிள்ளைகள் வேறு குடும்பமாகவே கணிக்கப்படுவர்.

Full MemberShip ஆனாலும், Secondary Membership ஆனாலும் தனிநபருக்கான சந்தாப்பணம் £15 ஆகும்.

8 ) வேலணை ஒன்றியம் பிரித்தானியா – அதன் வேலணையில் நடாத்தும் செயற்பாடுகளுக்காக, பிரித்தானியா தவிர்ந்த புலம்பெயர்ந்து வாழ்கின்ற வேலணை மக்களிடமும், அதன் நிர்வாகக் குழுவின் அனுமதியுடன் பண உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.






# AMIRTHAN & SURESH SOLICITORS

150a Ealing Road, Wembley, Middlesex, HA0 4PY
TEL: 020 8903 7211 | FAX: 020 8795 4056

*We offer a friendly service in the following areas of law:*

- *Commercial Conveyancing*
- *Residential Conveyancing*
- *Immigration & Nationality*
- *Liquor Licensing*
- *Landlord and Tenant Matters*
- *Divorce & Family Matters*


Partners: Mr Amirthan Rajakariar, Mrs Pawaleswary Suresh

Consultants: Mrs Chindu Gajanrajh *LLB (Hons)* (07958 010 816), Mr Chris Ebhote

*We pride ourselves in being able to provide a professional and understanding service for our clients and very much believe that the "old fashioned" concept of having a firm of solicitors undertake all legal work for the family is still highly appropriate in modern times, where a friendly ear can sometimes be needed.*

## 28 வேலணை மக்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம் உதவி 1 (24.01.2015)



29 வேலணை மக்களுக்கான

சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம் உதவி 2 (04.04.2015)



# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 01. | மங்கள விளக்கேற்றல் | |
| 02. | அக வணக்கம். | |
| 03. | செந்தமிழ்த் தாய் வாழ்த்து | -சங்கவி ஜெகதீஸ்வரன், சகானா சுரேஸ்வரன் |
| 04. | வரவேற்புரை | -திருமதி பத்மாவதி (லதா) அருள்ராஜ் |
| 05. | பக்திப்பாடல்கள் | -பாலா. ரவி இசைக்குழு |
| 06. | பொருளாளர் உரை | -திரு. பொன்னம்பலம் சிறீதரன் |
| 07. | பாடல் - சின்னமாமியே | -சகானா சுரேஸ்வரன் |
| 08. | இன்னிசைப்பாடல் - | -பாலா. ரவி இசைக்குழு |
| 09. | பொம்மை நடனம் | -இலக்சா கோபிதாஸ் |
| 10. | செயலாளர் உரை | -திரு தியாகராசா கலைவேந்தன். |
| 11. | பேச்சு – "எமது பெற்றோர்" | -அயிநயா கலைவேந்தன் |
| 12. | பரத நாட்டியம் - கீர்த்தனம் | -சுவேதா சத்தியநாதன் |
| 13. | தனி நடனம் - மீள் கலவை | -வினுசன் விஜயராசா |
| 14. | நடனம் - "மாடு மேய்க்கம் கன்ணன்" | -அயிநயா கலைவேந்தன் |
| 15. | பாடல் - "காற்றில் வரும் கீதமே" | -தர்சினி /கிருஸ்ணவி கங்கைநாதன் |
| 16. | பாடல் - "தோல்வி நிலையென நினைத்தால்" | -சகானா சரேஸ்வரன் |
| 17. | பரதநாட்டியம் - கவுத்துவம் | -சுவேதா சத்தியநாதன் |
| 18. | நடனம் | -அபிநயா |
| 19. | தலைவர் உரை | -வேந்தனார் இளஞ்சேய் |
| 20. | படக் காட்சி | |
| 21. | குழு நடனம் "காலிங்க நர்த்தனம்" | -கீர்த்திகா செல்வராஜ், இலக்சா கோபிதாஸ் அபிநயா/ அயிநயா கலைவேந்தன் நேகா சோபரா, பதுசா கோபிதாஸ் |
| 23. | நடனம் | -லயிற்றா |
| 24. | விருந்தினர் உரை | |
| 25. | இன்னிசைப் பாடல்கள் | பாலா. ரவி இசைக்குழு |
| 26. | நன்றியுரை | |
| 27. | உணவு நேரம் | |
| 28. | இன்னிசைப் பாடல்கள் | பாலா. ரவி இசைக்குழு |
| 29. | பரிசளிப்பு | |
| 30. | இன்னிசைப் பாடல்கள் | பாலா. ரவி இசைக்குழு |
| | நிறைவு | |

Velanai Ontium -UK - 2nd Year Annual Kalai Vizha
25th April 2015 Saturday (5.30-10.50pm)

# Programme

| | |
|---|---|
| 1. Lighting of the Traditional Lamp | |
| 2. One Minute Silence | |
| 3. Vocal – Senthamil Thai Vazhthu | -Sangkavie Jegatheeswaran, Sahana Sureshwaran |
| 4. Welcome Speech | -Mrs. Pathmawathi (Latha) Arulrajah |
| 5. Devotional Songs | -Bala Ravi Music Group |
